நூற்றாண்டு வெளியீடு

உலகுக்கு உதவிய
ஊருணி

(பெரியவர் சண்முகனார் வரலாற்றுக் கு... ...ிப்பு)

தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்
89, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை - 600 001.
1987

இல்லங்களை அழகு செய்து வாங்குவோர் உள்ளங்களை மகிழ்விப்பது

Erotex

FABRICS

ஈரோடு நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட், கே. 1216.

'ஜெகநாத நிலையம்'

218, நேதாஜி ரோடு, ஈரோடு - 638001

போன் : 74170
75568

தந்தி : 'ஈரோடெக்ஸ்'

ஷோ ரூம்கள்

- 110, கச்சேரி வீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.
- 23, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.
- 10, பி. வி. கே. அய்யங்கார் ரோடு, பெங்களூர் - 560 053.
- 7-3-130, மெயின் ரோடு, இந்துப்பூர் (ஆந்திரா)
- 231, நாயக்கர் புதுத்தெரு, மதுரை - 1.
- 77 A, கிழக்கு ரதவீதி, திருநெல்வேலி - 6.
- 2 A, காமராசர் தெரு, டவுன், சேலம் - 1.
- 23, பஞ்சவர்ண சுவாமி கோயில் தெரு, உறையூர், திருச்சி - 3.
- 186, எம். ஜி. கிளாத் மார்க்கெட், சிராளா (ஆந்திரா)
- காலேஸ்வரராவ் ரோடு, கவர்னர்பேட், விஜயவாடா - 2 (ஆந்திரா)

ஜெ. சுத்தானந்தன்
தலைவர்

நூற்றாண்டு வெளியீடு

உலகுக்கு உதவிய ஊருணி

(பெரியவர் சண்முகனார் வரலாற்றுக் குறிப்பு)



தென்னிந்திய செங்குந்த மகாசனசங்கம்,
89, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை - 600 001
1987

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901

நூன்முகம்

செங்குந்தகுல மக்களின் நல்வாழ்வுக்காக முதன்முதலாக, பங்குதாரர் முறையில், நூற்பாலையைத் தொடங்கி, நம்மவர்க்கு வேலை வாய்ப்புக்கும் ஏழை மாணவர்களின்கல்விவளர்ச்சிக்கும் உதவிய பெருந்தகையாளர்!

செங்குந்தர் எல்லாத் துறைகளிலும் நல்வாழ்வு பெறக் காலமெல்லாம் உதவிய உத்தமர்!

தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் தலைவராய் நெடிது நாள் இருந்து நல்ல பணிகளை நாளும் செய்த அண்ணல் நம் பெரியவர் சண்முகனார்!

அவரது வாழ்க்கை நமக்கு நல்ல வழிகாட்டியாகுக!

பத்மஸ்ரீ **M. P. நாச்சிமுத்து** B.A. B.L
தலைவர்
தென்னிந்திய செங்குந்தமகாசன சங்கம்
சென்னை-600 001.

ஸ்ரீ

திருப்பத்தூர்

பெரியவர்

திரு. கா. அ. சண்முக முதலியார்

அவர்களின்

வாழ்க்கைக் குறிப்பு

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

—வள்ளுவம்

பெயர் : திரு. **கா. அ. சண்முக முதலியார்**

பிறந்த தேதி : 2-11-1885
(பார்த்திப ஆண்டு, ஐப்பசி 18-ஆம் நாள் திங்கட்கிழமை-பூர நட்சத்திரம் -கும்பலக்கினம்)

பிறப்பிடம் : வடஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் நகரம்,

பெற்றோர் : தந்தையார் கா. அருணாசல முதலியார்—தாயார் முத்துவேடி அம்மாள்.

குடும்பப் பெயர் : காளியப்ப முதலியார் குடும்பம்.

பாட்டனார் : காளிப்ப முதலியார் ; இவர் பெயரே குடும்பத்தின் பெயராய் விளங்கி வருகிறது.

படிப்பு : நான்காம் வகுப்பு.

குடும்பத்தொழில் : வாரச் சந்தைகளுக்குச் சென்று ஜவுளி விற்பனை செய்தல்; வீட்டில் நூல் வாணிபம் செய்தல்.

குடும்பத் தொழிலில் ஈடுபாடு :

சண்முகர் குடும்பத்தில் மூத்த ஆண் மகன் என்பதால் தந்தைக்கு உதவியாகக் குடும்பத் தொழிலில் தமது 11 ஆவது வயது முதல் ஈடுபடுதல்; இதன் காரணமாகப் படிப்பு தடைப் பட்டது. வேலையாட்கள் இல்லாதபோது மாட்டுவண்டி ஓட்டுதல், மூட்டை தூக்குதல் முதலான வேலைகளையும் இவரே செய்தார்.

பெரியதாயாரிடம் அன்பு :

சண்முகரின் தந்தையார் அருணாசல முதலியார்க்கு இரு மனைவியர். முதல் மனைவி மங்கைத்தாயம்மாள். இவர் வழி ஆறு பெண் மகவு மட்டுமே பிறந்தன; ஆண் மகவு இல்லாமையால், அருணாசல முதலியார் இரண் டாம் மனைவியை மணந்தார். மூத்த ஆண் மகவாக சண்முகர் பிறந்தார். சண்முகர் இளம் வயது முதலே தம் பெரிய தாயாரிடம் வளர்ந்தவர். பெரியதாயார் சண்முக ரிடம் பெரிதும் அன்புடையவர். தம் சொந்த வயிற்றில் பிறந்த மகவாகவே பாசமுடையவராக இருந்தார்.

உடன் பிறந்தவர்கள் :

பழனிசாமி முதலியார், காளியப்ப முதலியார் ஆகிய இருவரும் சண்முகரின் தம்பியராவர். சகோதரியர் ஒன்பதின்மர்.

முதல் திருமணம் :

1902 இல் சண்முகருடைய 17 ஆம் வயதில் நடந்தது. வாணியம்பாடி நஞ்சப்ப முதலியார் என்பவரின் பேத்தி, எல்லம்மாளைத் தம் தாய்வழி உறவில் மணந்தார்.

இரண்டாம் திருமணம்

1908 இல் தம் தந்தையார் விருப்பத்தின்படி தம் சகோதரி வள்ளியம்மாள் மகள் பழனியம்மாளைத் தம் இளைய மனைவியாக மணந்து கொண்டார்.

மக்கட்செல்வம் :

சண்முகரின் இல்லற வாழ்வு எதிராசன், பத்மநாபன், ரகுநாயகன் ஆகிய மூன்று ஆண் மக்களையும் ஜானகி, சொர்ணம், கமலநாயகி, செல்வநாயகி ஆகிய நான்கு பெண்மக்களையும் பயன் கனிகளாய் ஈன்றது.

தமிழ்க்கல்வி :

சண்முகர் தம்முடைய 17ஆம் வயதில் ஆழ்வார்களின் அருட்பாடல்களைப் படித்துச் சுவைத்தார்.

18 ஆம் வயதில் நல்லியாங்குளத்து பாகவதர் என்பவருடைய பாரதப் பிரசங்கத்தைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றார். அவருடைய பேச்சு இவரைக் கவர்ந்தது. அதில் இவருடைய மனம் ஈடுபட்டது. அவரைப்போலத் தாமும் தமிழ் அறிஞராக வேண்டும் என்னும் எண்ணம் இவர் உள்ளத்தில் முகிழ்த்தது. தம் சொந்த ஆர்வத்தின் காரணமாகத் திருப்பத்தூரில் தமிழாசிரியராக இருந்த ஆதியூர் திரு. க. குமாரசாமி முதலியார் அவர்களை நாடினார். அவரும் இவர்க்குப் பாரதம் சொல்லித்தர உடன்பட்டுத் தொடக்கமாக வேறுசில சிற்றிலக்கியங்களைக் கற்றுத்தந்தார்; அவர் மைந்தர் திரு ஆ. கு. முருகையமுதலியாரிடமும் தொடர்ந்து தமிழ் கற்றார்.

பொது வாழ்வு :

கௌரவ மேஜிஸ்ட்ரேட் :

1915 இல் திருப்பத்தூர் துணையாட்சித் தலைவர் அவர்கள் சண்முகரை கௌரவ பெஞ்ச் மேஜிஸ்ட்ரேட்டாக நியமனம் செய்தார்கள். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர், 1920 இல் இவர் முதல் வகுப்பு பெஞ்ச் மேஜிஸ்ட்ரேட்டாக நியமனம் பெற்றார்.

ஜில்லா போர்டு அங்கத்தினர் :

1924 இல் ஜில்லா போர்டு அங்கத்தினர் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். 1933 இல் மீண்டும் இதன் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நகர மன்றத் தலைவர் :

1927 இல் திருப்பத்தூர் நகர மன்றத்திற்கு ஓர் உறுப்பினராக இவரை நியமனம் செய்தார்கள். அந்த ஆண்டிலேயே நகர மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1930 இல் மறுமுறை நகர மன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.

தாலுக்கா போர்டு தலைவர் :

1930 ஆம் ஆண்டு முதல் திருப்பத்தூர் தாலுக்கா போர்டில் உறுப்பினராக இருந்து வந்தார். 1933 இல் அந்தத் தாலுக்கா போர்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டமன்ற உறுப்பினர் :

1937 ஆம் ஆண்டில் இராஜாஜி மந்திரிசபை அமைத்த காலத்தில் முதன் முதலாக நிகழ்ந்த சென்னை மாகாண சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நின்று வெற்றிபெற்றுத் திருப்பத்தூர் தொகுதியின் M. L. A. வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காந்தியடிகள் தரிசனம்

1927 இல் காந்தியடிகள் கஸ்தூரிபாவுடன் குடியேற்றத்திற்கு வருகை தந்திருந்தார். சண்முகர் அங்குச்சென்று முதன் முதலாகக் காந்தியடிகளைச் சந்தித்து மாலை அணிவித்து வணங்கினார்.

தேசவிடுதலை இயக்கத்தில் ஈடுபாடு :

இப்பகுதியில் விடுதலை இயக்கத்திற்கு உறுதுணையாக நின்று தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் சண்முகர் ஆவார். காந்தியடிகள் சொல்வழி நடத்தலையும் கதர் அணிதலையும் தம் வாழ்வு நெறியாக இவர் போற்றினார்.

ஆங்கில ஆட்சியின் ஆணையை எதிர்த்தல் :

சண்முகர், 1929 இல் திருப்பத்தூர் நகராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது, ஒருநாள் சப்-கலெக்டர், சண்முகரை அழைத்தார். காந்தி, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத் தூண்டி விடுகிறார். அது ராஜ துரோகம். ஆதலின் காந்தியை எதிர்த்து ஆங்கில அரசுக்கு ஆதரவாக மக்களிடையே பிரச்சாரம் செய்ய வேண்டும். நீங்கள் இந்த நகரத்தின் சேர்மென் என்பதால் இதைக் கட்டாயம் செய்தாக வேண்டும்; இல்லையெனில் உங்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என ஆணையிட்டு அச்சுறுத்தினார். சண்முகர் அஞ்சாநெஞ்சத்துடன் அதனை மறுத்துவிட்டார். ''காந்தியடிகள் நாட்டுமக்களுக்கு நன்மையைத்தான் செய்கிறார். அது ராஜத்துரோகமாகாது; நான் அவரைத் தெய்வமாக மதிக்கிறேன்'' என அதிகாரிக்கு அறிவுறுத்தியதோடு தமது சேர்மென் பதவியையும் துச்சமென மதித்துத் துறக்கவும் துணிந்தார்.

காங்கிரஸ் இயக்கப் பணி :

சண்முகர் திருப்பத்தூர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டித்தலைவராகப் பல ஆண்டுகள்தொடர்ந்து பணியாற்றினார்.

18 — 2 — 1934 இல் காந்தியடிகள் திருப்பத்தூருக்கு வருகை தந்தபோது சண்முகரின் தலைமையில் அமைந்த

வரவேற்புக்குழு அரிஜன நிதிக்காகப் பொருள் திரட்டி, காந்தியடிகளிடம் ஒரு பணமுடிப்பை அளித்தது.

காந்தியடிகளின் நிர்மாணப் பணிகளுக்காக 1945 இல் தமது மணிவிழாப் பரிசாகப் திருப்பத்தூர் 'காங்கிரஸ் திடலை' அந்தப் பேரியக்கத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

மிட்டாதார் :

1933 இல் அண்ணாண்டப்பட்டி மிட்டாவை வாங்கினார். தாத்தவள்ளி மிட்டாவும் இவருக்கு உரிமை உடையதாயிற்று. மக்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய மிட்டாதாராக சண்முகர் மிளிர்ந்தார்.

தொழில் அதிபராக வளர்தல் :

கோவை மில் தொடர்பு :

கோவை P. S. G. குடும்ப நிறுவனங்களில் 1924 இல் முதலில் தொடங்கிய ஸ்ரீரங்கவிலாஸ் மில்லில், அந்தமில் ஆரம்பித்த போது சண்முகர் தாமாகச் சென்று பங்குத் தொகை முதலீடு செய்தார். இவர் செய்த முதலீட்டைக் கருதி இவருக்கு ஒரு டைரக்டர் ஸ்தானத்தை அந்தக் கம்பெனியார் வழங்கினார்கள்.

P. S. G. குடும்பத்தினர் பின்னர் தொடங்கிய கோயம்புத்தூர் பயனீர் மில்லிலும் இவர் டைரக்டராகப் பதவி வகித்தார். இந்த மில்களில் டைரக்டர்கள் போர்டின் சேர்மென் பதவியையும் வகித்துள்ளார்.

திருப்பூர் மில் தொடர்பு :

திருப்பூரில் ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை மில் தொடங்கிய போது, அதன் மேனேஜிங் ஏஜண்டுகள் இவரை நாடி வந்தார்கள். இவரும் அந்த மில்லில் பெரும்பங்கு முதலீடு

செய்தார். இப்பகுதியில் பலரிடம் பங்கும் வசூலித்துக் கொடுத்தார். அந்த மில்லிலும் தொடக்கம் முதல் பல ஆண்டுகள் டைரக்டராக இருந்து பணியாற்றினார்.

நூல் விற்பனை ஏஜன்சி :

குடியேற்றம், 'M. A. வேலாயுத முதலியார் K. A. சண்முக முதலியார்' என்னும் விலாசத்தில் கோயம்பத்தூர் ஸ்ரீரங்கவிலாஸ் மில், பயனீர் மில், திருப்பூர் ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை மில் முதலான மில்களிலிருந்து நூல்களை வாங்கிக் குடியேற்றம், காஞ்சிபுரம், நகரி, சென்னை ஆகிய நகரங்களில் நூல் விற்பனை செய்யும் உரிமையைப் (ஏஜன்சி) பெற்று வாணிபம் செய்து வந்தார்.

பருத்தி அறவை ஆலை :

1935 ஆம் ஆண்டில் குடியேற்றத்தில் 'கலைமகள் பருத்தி அறவை ஆலை' என்னும் பெயரில் ஒரு ஜின்னிங் பேக்டரியைத் தொடங்கியவர்களில் இவரும் ஒருவராக இருந்து பங்கு முதலீடு செய்தார்.

குடியேற்றம் திருமகள் நூற்பு ஆலையின் மேனேஜிங் டைரக்டர் :

சண்முகருக்கு நூல் வாணிகத்தில் இருந்த அனுபவம், கோவை மில்களுடன் கொண்டிருந்த தொடர்பு இவை காரணமாகத் தம் பகுதியில் ஒரு நூற்பு மில்லை உருவாக்க வேண்டும் என்னும் எண்ணம் அவர் உள்ளத்தில் அரும்பியது. 1937 ஆம் ஆண்டில் குடியேற்றம் நகரில் திருமகள் நூற்பு ஆலை 7 இலட்ச ரூபாய் முதலீட்டில் பதிவு செய்யப்பட்டது. அது முதலே சண்முகர் அதன் நிருவாக இயக்குநர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தமது 80 ஆவது வயது வரையில் சுமார் 27 ஆண்டு

களுக்கும் மேலாக நிருவாகப் பொறுப்பேற்று, அந்த மில்லின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார். இவருடைய அரிய முயற்சியாலும் தொழில் நுணுக்க வல்லமையாலும் திருமகள் மில் தென்னிந்தியாவிலேயே சிறந்த மில்களில் ஒன்று என்ற பெருமையைச் சூடிக்கொண்டது.

தென்னிந்திய ஜவுளி ஆலை அதிபர்கள் சங்கம் :

கோவையில் அமைந்துள்ள தென்னிந்திய ஜவுளி ஆலை அதிபர்கள் சங்கத்தில் சண்முகர் பெரிதும் செல்வாக்குப்பெற்ற அங்கத்தினராகத் திகழ்ந்தார்; முக்கியப் பிரச்சினைகள் எழும்போதெல்லாம் அவற்றிற்குத் தீர்வு காண்பதில் குடியேற்றம் ஆலைக்காரரான இவருடைய கருத்தை எல்லோரும் ஆர்வமுடன் வரவேற்பது வழக்கமாக இருந்தது.

குலத் தலைமைப் பணி :

நெசவுத் தொழிலை அடிப்படைத் தொழிலாகக் கொண்ட செங்குந்தர் மரபைச் சேர்ந்தவர் சண்முகர். தறி நெய்கிறவர்களுக்கு நூல்கொடுத்து, சேலைகள் வாங்கி அவற்றைச் சந்தைகளுக்குக்கொண்டு போய் விற்று வருவது இவருடைய தொடக்க காலத் தொழில். அதனால், தறி நெய்யும் தொழிலாளர்களுடன் இவருக்கு நெருங்கிப் பழகிடும் வாய்ப்பு ஏற்பட்டது. இதன்வழி ஏழை நெசவாளர்களின் துன்பங்களை இவர் நன்கு உணர்ந்திருந்தார். ஆதலின் நெசவாளர்களின் நலன் காக்கப்பாடுபடுகிற இயக்கங்களுடன் மிக நெருக்கமான தொடர்பைஇவர் கொண்டிருந்தார். 1934 இல் திருவாரூர் செங்குந்தர் மாநாட்டில் வர்த்தக மாநாட்டுத் திறப்பாளராகவும், 1937 இல் மதுரை செங்குந்தர் மாநாட்டில் தலைவராகவும், 1955 இல் திருச்செங்கோடு செங்குந்தர் மாநாட்டில் சமூக மாநாட்டின் தலைவராகவும் இவர்

பங்கேற்றார். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைமைப் பொறுப்பை 1953 இல் இவர் ஏற்றுக் கொண்டார்; சுமார் 23 ஆண்டுகள் குலத் தலைவராக விளங்கி, ஆக்கபூர்வமான பணிகள் பலவற்றை ஆற்றினார்.

கல்விப் பணி :

திருமகள் கல்விச் செல்வம் :

ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களின் வாழ்வில் கல்வி ஒளியை ஏற்ற விரும்பிய சண்முகர் திருமகள் மில்லின் சார்பில் 'திருமகள் கல்விச் செல்வம்' என்னும் அறக்கட்டளையை நிறுவினார். திருமகள் மில்லிலிருந்து ஒரு லட்ச ரூபாயும், மேனேஜிங் ஏஜண்டுக் கம்பெனியிலிருந்து ரூபாய் 25 ஆயிரமும் நன்கொடை வழங்கப்பட்டு, அறக்கட்டளைக்கான மூலதனம் ஏற்படுத்தப் பட்டது. இந்த அறக்கட்டளையின் செயலர் பொறுப்பையும் சண்முகர் ஏற்றுக் கல்விச் சேவை புரிந்தார். இன்றும் அந்தப் அறப்பணிகள், தலைவர் திரு. வெ மு. வாசுதேவ முதலியார், செயலர் திரு. பு. க. சிவஞானம் மற்றும் நிர்வாக உறுப்பினர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

குடியேற்றம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி :

குடியேற்றம் நகராட்சி உயர்நிலைப் பளளிக்காக ஒரு கட்டடம் கட்டத் தொடங்கிப் பல ஆண்டுகளாக நின்று போயிருந்தது. அந்தக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்காக சண்முகர், திருமகள் மில்லிலிருந்து நன்கொடை ரூ. 25,000 மும், தம் சொந்தப்பணத்திலிருந்து ரூ. 5000 மும் வழங்கினார். தவிர, அந்தக் கட்டடத்துக்கு வேண்டிய செங்கற்களை, மில்லின் நிலத்திலிருந்து தம் மேற்பார்வையில் சூளைபோட்டு வழங்கினார்; ஆயிரம் கல் வெளியில் 20 ரூபாயாக இருந்தபோது, இந்தக்கல் 9 ரூபாய் அடக்கமானது. அதுபோலவே மரத்திம்மைகளை

யும் கேரளாவில் வாங்கிக்கொண்டு வந்து சைஸ் மரங் களாக அறுத்து, மில் வளாகத்தில் தம் மேற்பார்வையில் கட்டடத்துக்கு வேண்டிய சரங்கள், சன்னல்கள், வாயிற் படிகள் முதலான சாமான்கள் செய்து கொடுத்தார்.

திருமகள் நூற்பாலை அரசு கலைக் கல்லூரி :

குடியேற்றம் நகரில் கல்லூரி இல்லாததைப் பெருங் குறையாகக்கருதினார் சண்முகர்; ஆதலின், திருமகள் மில் லின் மேலாண்மை இயக்குநராகத் தாம் இருந்த காலத்தில் திருமகள் கல்விச் செல்வத்திலிருந்து ரூபாய் 5 (ஐந்து) இலட்சத்தை அரசிடம் அறக்கொடையாக வழங்கி, 1964-ஆம் ஆண்டில் திருமகள் நூற்பாலைக் கலைக் கல் லூரியை நிறுவச்செய்து, மிகப்பெரிய பணியைச் சண்முகர் ஆற்றியுள்ளார்.

ஸ்ரீராமநிலையம் நகராட்சித் தொடக்கப்பள்ளி :

திருப்பத்தூரில் தமது செங்குந்தர் தெருவிலுள்ள சிறு மிகள் கல்வி கற்பதற்காக நகராட்சித் தொடக்கப்பள்ளி இந்தத் தெருவில் அமைய வேண்டும் என்னும் அவாவி னால் தம்முடைய கோவிலான ஸ்ரீராம நிலையத்துக்குச் சேர்ந்த மடைப்பள்ளி என்னும் கட்டடத்தைப் பல ஆண் டுகள்வரை இலவசமாக வழங்கினார். அப்பள்ளிக்குவேண் டிய பெஞ்சுகள், பலகைகள், கரும்பலகை, டேபிள், நாற் காலி முதலானவைகளையும் தாமே தம் சொந்தச் செல வில் தேக்கு மரத்தில் சண்முகர் செய்து கொடுத்தார். பின் னர் 1958 இல் தம் வீட்டுக்கு எதிரே உள்ள பல ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பெரிய இரண்டடுக்கு மாளிகை ஒன்றை இந்த ஸ்ரீராமநிலையம் பள்ளிக்கூடத்திற்குக் கல் விக் கொடையாக வழங்கினார்.

நகராட்சி உயர்நிலைப்பள்ளி :

திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கென 1955 இல் ரூபாய் 6000/- நன்கொடை வழங்கினார்.

இராமகிருஷ்ணா உயர்நிலைப்பள்ளி :

1968 இல் திருப்பத்தூர் இராமகிருஷ்ணா உயர் நிலைப்பள்ளிக்கு ரூபாய் 5000/-நன்கொடை அளித்தார்.

அரசு உயர் நிலைப்பள்ளிகள் :

திருப்பத்தூருக்கு மேற்கில் எட்டுக்கல் தொலைவில் உள்ள கஜ்ஜல்நாய்க்கம்பட்டி, இஜாராதார் சி. எ. வேங் கடப்ப நாயுடு அரசு உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.5000/-ம் திருப்பத்தூருக்குக்கிழக்கில் நான்குகல் தொலைவில் உள்ள மடவாளம் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்காக ரூ.2500/-ம் நன்கொடை வழங்கினார்

வேதாந்தத் தமிழ் வாசகசாலை :

குடியேற்றத்தில் திரு.பு.கா. கங்காதர முதலியார், திரு.வெ. முனிசாமி முதலியார், தருக்க வேதாந்த போதகாசிரியர் காஞ்சி ஆ. செங்கல்வராய முதலியார் ஆகிய பெருமக்களுடன் இணைந்து வேதாந்தத் தமிழ் வாசகசாலை எனும் கல்விசமய அறநிலயத்தைத் தோற்றுவித்து அதன் உறுப்பினராகவும் இருந்து பெருஞ்சேவை புரிந்துள்ளார்

கவிதைக்காக ஒரு கேடயம்

சென்னையில் அனைத்துக் கல்லூரி மாணவர்களுக் கான கவிதைப் போட்டிக்காக 1975 ஆம் ஆண்டில் ஓராயிரம் மதிப்புடைய சுழற்கேடயம் ஒன்று சண்முகர் பெயரால் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தில் நிறுவப்பட்டுள்ளது.

கோயில் திருப்பணிகள் :

☐ சண்முகர் இராமபிரானிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். சிறுவயது முதற்கொண்டு உண்டியலில் சேர்த்துவைத்த பணத்தைக் கொண்டு, ‘ஸ்ரீராம

நிலையம்' என்னும் ஸ்ரீராம பஜனை மன்றம் ஒன்றை இவர் 1924 இல் தம் குடும்பக் கோயிலாகவே கட்டி, கும்பாபிஷேகம் செய்து, அன்று முதல் ஆண்டு தோறும் பல விழாக்களை நடத்தி வந்தார். அவருக்குப்பின் அவர் குடும்பத்தார் இந்தக்கோயிலை நிருவகித்து வருகின்றனர்.

- திருப்பத்தூர் ஸ்ரீ கஜேந்திர வரதராஜப் பெருமாள் கோயில் திருப்பணிக்காக இவர் ரூ. 5000/-நன் கொடை வழங்கினார்.

- திருப்பத்தூர் செங்குந்தருக்குரிய அருள்மிகு தண்ட பாணி சுவாமி கோயில் திருப்பணிக்காக ரூ. 5000/— நன்கொடை அளித்தார்.

- குடியேற்றத்தில் திருமகள் பெயரால் நூற்பாலை கண்டதோடு, அந்த மில்லில் திருமகளுக்கும் விநாயக ருக்கும் கோயிலை எழுப்பி வழிபட்டு நிறைவு கொண் டார்.

- திருப்பதி — திருமலையில் பொதுமக்களின் வசதிக் காக தேவஸ்தானம் ஏற்படுத்திய குடில்கள் அமைப் புத் திட்டத்திற்கு ரூ. 6000/-ஐக் கொடையாக வழங் கிச் சங்குமிட்டா தெற்கு எண் 1 என்னும் குடிலை, 'அருணாசல நிலையம்' எனத் தம் தந்தையின் பெய ரால் கட்டி உதவி உள்ளார்.

சண்முகர் இயற்றி வெளியிட்ட நூல்கள் :

1. 'நளாயனி வெண்பா' — 1929 இல் வெளியிடப் பட்டது. இந்நூலுக்கு அக்காலத்தில் வாழ்ந்த பெருமக் களான இரா. இராகவய்யங்கார், ஞானியார் சுவாமிகள், மு. இராகவய்யங்கார் முதலிய சான்றோர்கள் சாற்றுகவி வழங்கியுள்ளனர். 1967 இல் இரண்டாம் பதிப்பு வெளி யானது.

2. 'திருமால் போற்றி அகவல்' — 1943 இல் அச்சானது. தமிழறிஞர் மு. வரதராசனார் அணிந்துரை வழங்கியுள்ளார். 1951 இல் இரண்டாம் பதிப்பும் 1959 இல் மூன்றாம் பதிப்பும் வெளிவந்தன.

3. 'அன்னை திருவடி போற்றி' — 1944 இல் இவருடைய அன்னையின் இறுதி நாளில் அன்னையின் அருமைகளை நினைந்து போற்றி இயற்றிய பாடல்களாக வெளியிடப்பட்டது.

4. 'திருவடி அடைந்த அன்னை' — 1944 இல் இவருடைய அன்னை மறைவின் போது அன்னையின் நினைவாய் இயற்றப்பட்ட பாடல்களின் வெளியீடு.

5. 'இராகவன் புகழறுபது' — 1945 இல் வெளியிடப் பெற்றது. இவருடைய அறுபதாண்டு நிறைவு மணி விழாவில் இராகவனைப் போற்றி இராமாயணக் கதைகளைக் கோவையாகச் சொல்லித் துதிக்கும் பாடல்கள் (எண்சீர் விருத்தப்பா) அறுபதைக் கொண்ட நூல். தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள் இந்நூலுக்கு முன்னுரை வழங்கியிருக்கிறார். அத்தோடு, சண்முகரின் மணிவிழாவில் நிகழ்ந்த இந்நூலின் அரங்கேற்றத்திற்குத் திரு. வி. க. தலைமை ஏற்றுள்ளார்.

6 'திருமால் அவதாரம்' — 1947 இல் வெளியானது. திருமாலின் பத்து அவதாரங்களை விதந்து கூறித் துதிக்கும் அந்தாதிப் பாடல் பத்தும் காப்புச் செய்யுள் ஒன்றும் சேர்ந்து பதினோரு பாடல்.

7. 'திருவேங்கடமாலை' — 1947 இல் வெளிவந்தது. மூன்று தலைமுறையினரின் பிரார்த்தனை உண்டியலை ஏந்திக் கொண்டு திருமலை யாத்திரை சுற்றத்தாருடன் சென்றபோது துதித்துப் பாடிய பாடல்கள்.

8. 'நூற்றெட்டுத் திருப்பதி போற்றி அகவல்'-1963இல் வெளிவந்தது. திருமாலின் திவ்ய தேசங்களைனப் போற்

திருப்பதிகள் அனைத்தையும் கண்டு சேவிக்க இவர் பெரு விருப்பம் கொண்டிருந்தார். அறுபதுக்குமேல் சேவித்தார். ஆயினும் வயது முதிர்ச்சியாலும் உடல் தளர்ச்சியாலும் எஞ்சிய திருப்பதிகளைச் சேவிக்க முடியாத நிலையில், அந்த அந்தத் திருப்பதியில் எழுந்தருளியுள்ள பெருமாள்களின் பெயரைச் சொல்லித் துதித்து மகிழ்ந்தார். அதுவே இந்த நூலாக உருவானது. 108 திருப்பதிகளுக்குச் செல்லும் வழிகளையும் இந்த நூல் சுருக்கமாக விளக்குகிறது. மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியிருக்கிறார்கள்.

9. 'திருமால் வெண்பா மாலை'— 1964 இல் வெளியானது. திருமகள் மில் நிருவாகத்தில் சிக்கல்களும் மன சஞ்சலமும் ஏற்படும் நாளில் திருமாலிடம் சரணடைந்து போற்றிச் செய்வது இவரது வழக்கம். அப்போது ஒவ்வொரு பாடலாக இயற்றுவார். அப்பாடல்களில் பொறுக்கிய நூற்றெட்டுப் பாடல்களைக் கொண்டது இந்த நூல். திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் அணிந்துரையுடன் இந்நூல் வெளிவந்துள்ளது.

10. 'இராகவன் புகழ் மாலை'—1968இல் வெளியானது 'இராகவன் புகழறுபது' என 1945 இல் வெளிவந்த நூலின் பெருக்கமே இது. அறுபது பாடல்களில் சொல்லிய இராமாயணக் கதை மன நிறைவு அளிக்காமல், மேலும் பல கதைப் பகுதிகளைக் கொண்டு 255 துதிப் பாடல்களில் யாத்த நூல் இது. திரு. P. B. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், திரு. இராய. சொ. முதலிய சான்றோர்களின் சாற்றுகவியைத் தாங்கி இந்நூல் வெளி வந்துள்ளது.

11. 'திருவேங்கடப் பெருமான் திருப்பள்ளி எழுச்சி' —1969 இல் வெளிவந்தது. தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கப் பெருமானுக்குப் புகழ்மிக்க "திருப்

பள்ளி எழுச்சி'' பாடி மகிழ்ந்தார். எல்லாச் சிறப்புக்களும் நிறைந்த திருவேங்கடமுடையானுக்கெனத் தமிழில் திருப் பள்ளி எழுச்சிப் பாடல் இல்லாத குறையைப் போக்க எழுந்தது இந்நூல்.

12. 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'— 1971 இல் வெளி வந்தது. பகவானைப்பற்றிப் பல நூல்கள் யாத்த இவர் பாகவதர் பெருமையையும் பாடவேண்டும் என்பது நண்பர்களுடைய விருப்பம். அந்த விருப்பத்தை நிறைவு செய்வதற்கென்று இந்த நூல் எழுந்தது. பாகவதர் களிலேயே தலைமை பெற்றவர்கள் ஆழ்வார்கள். அவர் களில் சிறப்புடையவர் ஸ்ரீ ஆண்டாளே! 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்பது ஸ்ரீ ஆண்டாளின் விஞ்சிய செய லால் பெற்ற திருநாமம். இந்நூல் திரு. P. B. அண்ணங் கராச்சாரிய சுவாமிகள், திரு. பொ. சுந்தரமூர்த்தி நாய னார், திரு. ஆசூரி நரசிம்மாச்சாரியார் திரு. ந. ரா. முருக வேள் முதலிய பெருமக்களின் சாற்றுகவியையும் அணிந் துரையையும் பெற்று வெளிவந்துள்ளது.

13. தமிழ்ப் புத்தாண்டு நாளிலும (சித்திரை முதல் நாள்) பொங்கல் திருநாளிலும் இறைவனை வேண்டி வாழ்த்துப்பா எழுதுவது இவர்க்குப் பல ஆண்டுகளாக வந்தபழக்கம். ஆண்டுதோறும் அந்த அந்த நாளில் வாழ்த்துப்பா எழுதி அச்சிட்டு நண்பர்களுக்கும் உறவினர் களுக்கும் இவர் அனுப்பி வைப்பார்.

மேற்குறித்த அனைத்து நூல்களுமே வணிக நோக்கத் திற்குச் சிறிதும் இடமின்றி, பரிசு நூல்களாகவே வெளி யிடப்பட்டு எல்லோருக்கும் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளன; சண்முகரின் இந்த அரிய தமிழ்த் தொண்டு போற்றுதற்குரியது.

சண்முகரைக் குறித்து வெளிவந்துள்ள நூல்கள்:

(1) **'திருவடி போற்றி'** —இது 1977 இல் வெளியானது. சண்முகரின் முதுமைக் காலத்தில், அவர் தம் மக்கள் தந்தைக்குப் "பாத பூஜை" விழா எடுத்து வழிபட்டு வணங்கிய போது போற்றிப் பாடலாக வெளியிடப் பட்டது.

(2) 'திருப்பத்தூர் திரு. கா. அ. ஷண்முக முதலியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு' — 1978 இல் வெளியான நூல் இது. சண்முகரின் மறைவின்போது, அவருடைய பெருவாழ்வை நினைந்து போற்றும் வகையில், அவருடைய பதினோராம் நாளின் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

இந்த இருநூல்களையும் சண்முகரின் மக்கள் திரு. கா. அ. ச. பத்மநாபன், திரு. கா. அ. ச. ரகுநாயகன் ஆகிய இருவரும் இணைந்து படைத்து, அன்பளிப்பு நூல்களாக வெளியிட்டு உள்ளார்கள்.

காமராஜருக்கும் சண்முகருக்கும் இடையே நிலவிய நெருங்கிய நட்பு:

பெருந்தலைவர் காமராஜருக்கும் சண்முகருக்கும் இடையே நிலவிய நட்பு மிக நெருக்கமானது; உன்னதமானது! காமராஜர் 1953இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றார்; இருப்பினும் 6 மாதத்திற்குள் M. L. A. ஆக வேண்டும் என்ற நிலை. இந்தச் சமயத்தில், குடியேற்றம் திருமகள் மில்லின் மேனேஜிங் டைரக்டராக இருந்த சண்முகர், காமராஜரைக் குடியேற்றம் இடைத் தேர்தலில் போட்டியிடுமாறு, அந்த மக்கள் சார்பில் அழைப்பு விடுத்தார். சண்முகரின் அழைப்பை ஏற்று, காமராஜரும் குடியேற்றம் தொகுதியில் போட்டியிட்டுப் பெருவெற்றி பெற்றார். தேர்தல் பணிகள் முழுவதையும் சண்முகர் முன்னின்று பொறுப்பேற்று நடத்தி உதவி

னார், பல ஆண்டுகளாக இருவருக்கும் இருந்து வந்த பழக்கம், இதற்குப் பின்னர் நெருங்கிய நட்பாக மலர்ந்தது. காமராஜர் இறுதிவரையில் சண்முகரிடத்தில் மிக்க அன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தார்.

நண்பர்களில் *சிலர்* :

* அரசியல் துறையில் காமராஜரோடு மட்டுமல்லாமல் ராஜாஜி, ராஜேந்திர பிரசாத், அவினாசிலிங்கம் செட்டியார், சுப்பராயன், பெரியார் ஈ. வெ. ரா., எம். பக்தவத்சலம், பி. கக்கன் ஆகியோர் உடனும் சண்முகர் நட்புக் கொண்டிருந்தார். காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் மாற்றுக் கட்சி அன்பர்களிடத்தும் நட்புடன் பழகிடும் பண்பு இவருக்கு உரியது.

சமயத்துறையில் காஞ்சி பெரியவர் ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ P. B. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஆகியோரின் தொடர்பு குறிப்பிடத்தக்கது.

* தமிழ் இலக்கிய உலகில் டாக்டர் மு. வ., மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, தமிழ்த் தென்றல் திரு. வி. க., தமிழ்க்கடல் ராய. சொ. முதலியோரிடம் உள்ளார்ந்த நட்புப் பூண்டிருந்தார்.

* தொழில் துறையில் கோவை திரு. P. S. G. கங்கா நாயுடு, திருவாரூர் திரு. தி. நா. சபாபதி முதலியார் ஆகியோரோடு மிகநெருக்கமான நட்புக் கொண்டிருந்தார்.

சண்முகர் கண்ட விழாக்கள் :

* 1945 அக்டோபர் 31 இல் இவருக்கு அறுபது ஆண்டு நிறைவு மணிவிழா நடைபெற்றது.

* 1965 அக்டோபரில் எண்பது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது.
* 22 — 5 — 1968 இல் நான்காம் தலைமுறைப் பேரன் (மகனுக்குப் பேரன்) பிறந்தபோது பொன் னீராட்டு விழா நடைபெற்றது.
* 1 — 9 — 1977 இல் இவர் கையினால் பசு தானம் வழங்கினார்.
* 2 — 9 — 1977 இல் இவருக்கு இவர் மக்கள் 'பாத பூஜை விழா' செய்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

சுற்றத்தார்க்கு உதவுதல் :

'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்னும் முதுமொழிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குவது சண்முகரின் வாழ்வு. தாயாதிகள் வீட்டில் ஆண் பிள்ளை களுக்குத் திருமணம் ஆகும்போது, கூறை, தாலி கொடுப் பதையும் பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் ஆகும்போது நகை ஒன்று செய்து கொடுப்பதையும் இவர்தம் கடமை யாகக் கொண்டு ஒழுகினார்.

விருந்தோம்பல் :

தம் வீட்டுக்கு வந்தவர் யாராகினும், அவருக்கு முதலில் உணவிட்டு உபசரித்தலை, சண்முகர் தம் வாழ் வியல் பண்பாகக் கொண்டிருந்தார். ஊரில் அரசியல், சமயம், இலக்கியம் என எந்தப் பொது நிகழ்ச்சி வைபவங் கள் நடந்தாலும் அவற்றிற்கான விருந்து இவர் வீட் டிலேயே நிகழ்வது வழக்கம். வாய்ப்பு நேரும் போதெல் லாம் ஏழை எளியவர்க்கு அன்னதானம் செய்து மகிழ் வார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிடும் உயர் நெறியாளர்; உணவிடுகின்ற அறத்தையும் கூட இவர் பாங்கோடு — முறைமை நெறியோடு முகமலர்ந்து ஆற்றி விருந்தோம் பலுக்கு ஓர் இலக்கியமாக விளங்கினார்.

செய்துவைத்த கும்பாபிஷேகங்கள் :

சண்முகர், இப்பகுதியில் பல ஊர்களிலுள்ள கோயில் களுக்குக் கும்பாபிஷேகங்களை முன்னின்று தலைமை யேற்று நிகழ்த்தி உள்ளார்.

சோதிடக்கலையும் நாள் பார்த்துக்கொடுத்தலும்:

திருமணம், கிரகப்பிரவேசம் என எந்த ஒரு நல்ல செயலைச் செய்வதனாலும் அதற்குச் சண்முகர் நாள் குறித்துக் கொடுத்து முன்னிருந்து நடத்தி வைத்தால் அது தழைத்து வளரும் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கை. இவர் நல்லோரை கணித்தல், சோதிடக்கலை இவற்றில் வல்லவர்.

கட்டடக் கலை :

மனையடி சாத்திரத்தில் இவருக்கு நூலறிவும் பட்டறி வும் உண்டு. அதனால் பலர் வீடுகட்ட முனையும்போது இவரிடம் வந்து ஆலோசனை பெறுவர். மனைகட்டும் இடத்துக்கும் அழைத்துச் சென்று அளவுகளைக் கேட்டு அதன்படி மனைகளை அமைப்பர்.

மருத்துவக் கலை :

சண்முகர் மந்திரத்தால் நோய்போக்கும் மருத்துவக் கலையும் அறிந்திருந்தார்; மார்சிலந்திக்கும் தேள் கடிக்கும் மந்திரம் போட்டு, தம்மிடம் வருவோரின் பிணி யினைப்போக்கிட உதவுதலை வழக்கமாக இவர் கொண் டிருந்தார்.

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுதல் :

சுற்றத்தினரும் நண்பர்களும் இவரிடம் வந்து தம் குழந்தைகளுக்குச் சூட்டுவதற்கான பெயரை எழுதி வாங்கிச்செல்வர். இவரே சென்று பெயர் சூட்டுதலும் உண்டு.

தொடங்கிவைத்தல் :

தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், கல்விச் சாலைகள், புதுக்கணக்குகள், அறக்கொடைகள் ஆகிய எவையானாலும் சண்முகர் கையால் தொடங்கி வைக்கப் படுதலைச் சிறப்பிற்குரிய பெரும் பேறாக மதித்தல் இப்பகுதி மக்களின் வழக்கம்.

செய்து வைத்த திருமணங்கள் :

சண்முகர் தம்முடைய குடும்பத்தில் தம்முடைய மக்கள், தம்பியின் மக்கள், பேரன் பேத்திமார்கள் ஆகியோருக்குத் தாமே செய்துவைத்த திருமணங்களின் எண்ணிக்கை இருபத்தைந்தாகும்.

பேரன் பேத்தியர் :

இவருடைய குடும்பத்தில் மக்கள் வழிவந்த பேரன் பேத்தியர்கள் எழுபத்தறுவரையும் இவர் கண்டு மகிழும் பேறுபெற்றிருந்தார்.

சமய நெறி:

சண்முகர் வைணவ சமயநெறியினர்; இருப்பினும் வாழ்வில் சமய வேற்றுமை காட்டாது, சமயப் பொறை மிக்க செம்மலாக விளங்கினார்.

சீர்திருத்தம்:

பழமை தழுவிய சூழலில் வளர்ந்தவர் சண்முகர், எனினும் மனித வாழ்வின் வளர்ச்சி நோக்கிய புதுமை; களை ஏற்றுக் கொள்வதில் மிக்க ஆர்வம் கொண்டவர். பகட்டாகவும் முட்டுக் கட்டையாகவும் நிலவிடும் கண்மூடி வழக்கங்களைத் தூக்கியெறியும் துணிவினர். தம்மளவில் மட்டுமல்லாமல் குடும்பம் சமூகம் என்றநிலையிலும் இவர் வாழ்வு பல சீர்திருத்தங்களைக் கண்டுள்ளது.

'பெரியவர்' என்ற அடைமொழிப்பெயர்:

குடும்பத்தில் சகோதரர்களுக்குள் மூத்தவர் என்பதால் தொடக்கத்தில் 'பெரியவர்' என்பது சண்முகருக்குரிய வீட்டுப் பெயராய் அமைந்தது. பின்னர் சண்முகரின் பெருந்தன்மையோடு கூடிய பொதுவாழ்வும் பெரு வாழ்வும் வீட்டுக்கு மட்டுமல்லாமல் நாட்டுக்கும் உரிய பெயராகவும் அதனைச் சிறக்கச்செய்தது. பெருந்தலைவர் காமராஜர் முதலானவர்களும் சண்முகரைப் 'பெரியவர்' என அன்போடு அழைத்து மகிழ்தல் வழக்கமாயிற்று!

அயரா உழைப்பு:

சண்முகர் தமது இறுதிக்காலம் வரையில் அயரா உழைப்பை மேற்கொண்டார்; இறுதிக்காலத்தில் இலக்கியப் பணியே இனிய பணியாய் அவர்க்கு அமைந்தது.

வாழ்வியல் நோக்கு:

எளிமை— நேர்மை— கடமை— உழைப்பு— ஈகை சேவை – இவைகளே சண்முகரின் வாழ்வு!

வாழ்வு நிறைவு:

சண்முகரின் பெருவாழ்வு— பல்வேறு துறைகளையும் கண்ட பட்டைதீட்டிய பன்முகவைரமாக ஒளிர்ந்திடும் மாபெரும் வாழ்வு. அப்பெருவாழ்வு 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் நாள் (காளயுக்தி ஆண்டு, ஆடி மாதம், முதல் நாள்) திங்கட்கிழமை காலை 7-40 மணி அளவில் முடிவுற்றது. சண்முகர் இப்பூவுலகில் 93 ஆண்டுகள் வாழ்ந்து— வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து புகழ் வடிவாய் நின்று வாழ்த்துகின்றார்.

''செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு''

வள்ளுவம்

BLUE MOUNTAIN
CHITS & FINANCE (P) LTD

புளு மவுண்டன் சிட்ஸ் & பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

No. 200, தம்புச் செட்டி தெரு,
சென்னை - 1

தொலை பேசி : 512958
Regd No : 6201

ஒளி மயமான எதிர்காலம் உங்களை அழைக்கிறது. விரும்பியதை விரும்பிய வண்ணம் பெறத் தருணம் வந்துள்ளது. பரந்த நோக்கம், உயர்ந்த கொள்கை, ஆழ்ந்த சிந்தனையுடன் 12-7-1972 ல் உங்கள் நலனைக் கருத்தில் கொண்டு சீட்டுக் கம்பெனியை உருவாக்கினோம். ரூ. 1000 முதல் ரூ. 1,00,000 வரையில் உள்ள பல குருப்களை நடத்தி வருகிறோம். பலர் பயன் அடைந்துள்ளார்கள். அவர்களைப் போல் தாங்களும் பயனடைய அழைக்கிறோம்.

இங்ஙனம்
M. S. ரெங்கையா, B. A.,
தலைவர்

S. சபாபதி முதலியார் — பொறுப்பு - இயக்குனர்
K.R. ஆராவமுதன் — செயல் - இயக்குனர்.

CHENTEX SHOW ROOMS

VUMMIDIARS SHOPPING CENTRE
811, Anna Salai,
Madras - 600 002.

34/35. WAIKIKI COMPLEX,
289, Purasawalkkam High Road,
Madras - 600 007.

13, WEST CHITHRAI STREET,
Madurai - 625 001.

489, BIG BAZAAR STREET,
Trichy - 620 008.

147, ESWARANKOIL STREET.
Erode - 638001.

NILGIRIS BUILDINGS
171, Brigade Road,
Bangalore - 560 001.

Opposite to M. G. C. MARKET,
Rajaram Mohanroy Road.
Chirala - 523 155.

7-3-225, PRAKASAM PANTHULU ROAD,
Hindupur - 516 360.

27-21-53, KALESWARA RAO ROAD,
Governorpet,
Vijayawada - 520 002.

M. P. Nachimuthu, B.A. B.L.
President